Ti Anode Fabricators Pvt. Ltd.
An ISO 9001 : 2008 Certified
Tiaano® Innovation In Inert Metals 23 YEARS Since 1992
# 48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: +91 44 2278 1148 Fax: 22781362 Mob: +91 94445 69900 Email: marketing@tianode.com Web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2015-2016

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 156% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Dec. 15 : 917 Nos.
  - Up to Nov. 15 : 910 Nos.
- **Performance Dec. 15 ...**
  - Turnover growth : 17.27%
  - Employment growth : -2.75%
  - 100% Attendance : 9.89%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Treatment Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Equipments.
- HydroGen – HHO Generators
- Titanictrade – Portal for Exotic Metals
- Tiaano Vidyashrm (CBSE Curriculam)

### ACHIEVEMENT CHART




## பிராத்தனை

பிரபஞ்சத்தின் மூலமான பரம்பொருளே!
புதிய தொடக்கத்தின் வாயிலில் நாங்கள்...

வருகிற காலங்கள் வெற்றிகள் தருக!
நெருங்கும் துணையாய் நீயே வருக!

நலவாழ்வென்னும் நல்வரம் அருள்க!
வளங்களை வழங்கும் வாய்ப்பாய் மலர்க!

உறவாய் உயர்வாய் உணர்வில் நிறைக!
உலகம் உந்தன் அருளால் பொலிக!

அத்தனை திசையிலும் அமைதியே திகழ்க!
அத்தனை வளர்ச்சியும் அனைவர்க்கும் நிகழ்க!

வானிடம் பேசும் வயல்கள் பொலிக!
மானுடம் எழுக! மகிழ்ச்சியே நிறைக!

*– Tiaano*

## நீ மாறினால் உலகை மாற்றலாம்

* டிராபிக் லைட்டில் பச்சை விழும் முன்பே இச்சையை அடக்க முடியாமல் முந்திப் பறப்பார்கள்.
* போலீசாரைக் கடந்தவுடன் ஹெல்மெட்டை தூக்கி பெட்டியில் ஒளிப்பார்கள்.
* இலவசத்தை ஒழிக்கணும்னு உதார் விட்டுவிட்டு, ஏழைகளுக்காக அரசு தந்த இலவச வண்ணத்தொலைக்காட்சியை அரை விலைக்குக் கேட்பார்கள்.
* பிளாட்பார விபத்து வழக்கில் சல்மான்கான் விடுதலையை விமர்சித்துவிட்டு, சாலையில் பார்க்கும் விபத்துகளை சலனமின்றிக் கடப்பார்கள்.
* காரியங்கள் சாதித்துக்கொள்ள கையூட்டு தருவார்கள்.
* புகழ்கிறேன் என சொல்லி பொய்யூத்தி வைப்பார்கள். பதின்ம வயதுக்காரன் பரிமாற வாழையிலையில் வயிறார விருந்துண்பார்கள்.
* ரத்த உதவி கேட்டு வரும் மெசேஜ்களை வாட்ஸ்அப் குரூப்பில் போட்டுவிட்டு புண்ணியம் தேடுவார்கள்.
* பேஸ்புக்கில் பத்தாயிரம் பேரை நண்பர்களாக்கிக்கொண்டு பக்கத்துக்கு ப்ளாட்காரர் பெயரைக் கேட்டால் முழிப்பார்கள்.
* கோக்கை குடித்துக்கொண்டே கையேந்தி பவனின் சுகாதாரம் அளப்பார்கள்.
* பொருளாதாரம் பற்றி வகுப்பெடுத்துவிட்டு ஃப்ரீ wifi பாஸ்வேர்டு கேட்பார்கள்.
* பஸ்ஸிலும் பார்க்கிலும் பிறர் பார்க்கும்போதே பொட்டலம் பிரித்து உணவு உண்பார்கள்.

## EXTERNAL SUPPORT

Banking : M/s. UCO Bank

Auditing : M/s. Nisar & Kumar

AQ Auditing : M/s. Juran Quality

Legal Advisers : Lr. M.K. Govindan

: Lr. V. Benedict Vincent

Tech. Consultant: Dr.G.S. Viswanath

Central Excise : Mr. R. Raghavan

Health Care : M/s. Bethesda Hospital

Tel: 22294565

ESI Corporation : Tambaram Dispensary

Tel: 044 2226 0194

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mr. C. SOUNDER SURESH** **02nd Feb.**
Purchase

**Mr. V. BABU** **05th Feb.**
Administration

**Miss. P. NIRMALA DEVI** **25th Feb.**
Finance

**Best Wishes from Tiaano Employees**



"People are often unreasonable
And self-centered.
Forgive them anyway.
"If you are kind, people may accuse you of
Ulterior motives. Be kind anyway.
"If you are honest, people may cheat you.
Be honest anyway.
"If you find happiness, people may be jealous.
Be happy anyway.
"The good you do today may be forgotten
Tomorrow. Do good anyway.
"Give the world the best you have and it may
Never be enough. Give your best anyway.
"For you see, in the end, it is between you
And God. It was never between you and them
Anyway."

- **Mother Teresa**

* டாக்கிங் டாமை கொஞ்சும் நேரத்தில் கொஞ்ச நேரம் கூட வேலைக்கார்கள் குழந்தைகளைக் கொஞ்சுவதில்லை.
* கேட்பது நண்பனாக இருந்தாலும், கடனைப் பற்றி கதைகள் பேசிவிட்டு கை விரிப்பார்கள்.
* பின்னால ஃப்ளைட்டே வந்தாலும், நினைத்தவுடன் இண்டிகேட்டர் போட்டு நினைத்த இடத்தில் திரும்புவார்கள்.
* போக்குவரத்து நெரிசல் எனத் தெரிந்தும் ஓயாமல் ஹான் அடிப்பார்கள்.
* முழு போதையில் கணக்கு தவறென டாஸ்மாக் சப்ளையரிடம் வம்பிழுப்பார்கள்.
* தவறாக யாரேனும் குறுக்கே வந்தால் கூட, மனசுக்குள் கெட்ட வார்த்தை சொல்லிப் பார்ப்பார்கள்.
* குறுக்கு வழிகளை குழந்தைகளுக்கும் சொல்லித் தருவார்கள்.
* பிள்ளைகள் மனதில் போட்டி, பொறாமைகளைப் பதிய வைப்பார்கள்.
* நீண்ட நெடிய வரிசையில் இடையில் நுழைய வாய்ப்பிருக்கா என பார்ப்பார்கள்.
* கர்ப்பிணியோ கிழவியோ நின்றே பயணிப்பதைப் பார்த்தாலும், தூங்குவது போல பாசாங்கு செய்வார்கள்.
* கவுன்சிலரைப் பாரத்து கையெடுத்து கும்பிட்டுவிட்டு காந்தியையும் காமராஜரையும் கக்கனையும் கிழிப்பார்கள்.
* வீட்டுக்குள் வெள்ளம் வராவிட்டால் கூட, நிவாரண நிதிக்கு பேர் கொடுப்பார்கள்.
* பெரியாரின் பேரன் போல பேசினாலும், ஜாதி தெரிந்த பின்தான் பழகுவார்கள்.
* நேர்மை, நாணயம் பேசிக்கொண்டே, சிபாரிசு கிடைக்குமா என தேடிப் போவார்கள்.
* மன அமைதிக்கு யோகா கிளாஸ் சென்றுவிட்டு, வெளியே டுவிலரில் யாராவது உட்கார்ந்திருந்தால் சண்டைக்கு போவார்கள்.
* திரையுலகம் தவறான வழியில் செல்கிறதென விமர்சித்தபடத்தை திருட்டு வீசிடியில் படம் பார்ப்பார்கள்.
* இப்படியாக எல்லாவற்றையும் மறக்காமல் மாறாமல் செய்துகொண்டே, மாற்றம் வேண்டுமென, ஒழுங்காகப் பணியாற்றும் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை அரசியலுக்கு அழைப்பார்கள்.

**மாற்றங்கள் மற்றவர்கள் கொண்டு வருவதல்ல; என்னை நானும் உன்னை நீயும் மாற்றினால், நாம் உலகை மாற்றலாம்**

*Compiled by* : Mr. V. P. Jeyakumar
*Managing Director*

### Trees Prevent Floods!

Trees allow water to be drained into the ground. Their canopies absorb the force of the raindrop and thereby prevent soil erosion, their roots absorb water from the soil, making the soil drier and able to store more rainwater. These roots hold the soil in place, reducing the movement of sediments that can shrink river channels downstream. Plant trees today to avoid man-made disasters.

## தெரிந்து கொள்வோம்

### நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் மிளகு

உலகிலேயே கேரள மாநிலத்தில்தான் மிளகு அதிகம் உற்பத்தியாகின்றது. பழங்காலத்தில் வணிகத்தில் மதிப்பு மிக்க பொருளாக இருந்தது, மிளகு. அதனால் இது கறுப்பு தங்கம் என்றழைக்கப்பட்டது.

'பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்!' என்பது பழமொழி.

* 1 தேக்கரண்டி மிளகை இடித்து, 200 மி.லி. நீரில் கொதிக்க வைத்து பனவெல்லம் அல்லது தேன் கலந்து குடிப்பது பலவித நோய்களை கட்டுப்படுத்தும்.
* மழைக்காலத்தில் அடுக்கடுக்காக தும்மல், கண்களை சுற்றிய அரிப்பு, மூக்கில் நீர் வழிதல் போன்றவை ஏற்படும். இதற்கு ஒரு தேக்கரண்டி மிளகையும், ஒரு வெற்றிலையையும் நீரில் கொதிக்கவைத்து பருகவேண்டும். இது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும்.
* தொண்டை கட்டு, குரல் கம்மல், தொண்டை வலி போன்றவை இருந்தால், 1 தேக்கரண்டி மிளகை நெய்யில் கருக வைத்து பொடித்து தேன் கலந்து சாப்பிடவேண்டும். விட்டுவிட்டு வரும் காய்ச்சலுக்கு மிளகு கஷாயம் சிறந்தது.
* பசி குறைவாக உள்ள சமயங்களில், ஒரு தேக்கரண்டி மிளகு பொடியை நாட்டு சர்க்கரையுடன் கலந்து சாப்பிட வேண்டும்.
* பல் சொத்தை, பல் கூச்சம் ஏற்படும்போது, மிளகு பொடியுடன் உப்பு கலந்து பல் தேய்க்க வேண்டும்.

### நம்மை உயர்த்தும் 7 விசயங்கள்

1. ஏழ்மையிலும் நேர்மை
2. கோபத்திலும் பொறுமை
3. தோல்வியிலும் விடாமுயற்சி
4. வறுமையிலும் உதவி செய்யும் மனம்
5. துன்பத்திலும் துணிவு
6. செல்வத்திலும் எளிமை
7. பதவியிலும் பணிவு

*Compiled by : Mrs. P. Seevajothi Design*

### இந்தியாவை "வட்டமிடும்" சல்பர் டை ஆக்சைடு பேராபத்து

- சல்பர் டை ஆக்சைடால் பல சுகாதாரக் கேடுகள் மட்டுமல்லாமல் வானிலை மாற்றங்களும் கூட நேரிடும்.
- எரிமலை வெடிப்பு, தீ, பைட்டோபிளாங்டான் போன்ற இயற்கை சீற்றங்களிலிருந்து சல்பர் டை ஆக்சைட் உற்பத்தியாகிறது. இருப்பினும் சல்பர் அதிகம் அடங்கிய நிலக்கரி, எண்ணெய், பெட்ரோலியம் ஆகியவற்றிலிருந்து இந்த வாயு அதிக அளவில் உற்பத்தியாகிறது.
- உலக அளவில் சல்பர் டை ஆக்சைட் உற்பத்தியைக் குறைத்துக் கட்டுப்படுத்த நாடுகள் பல்வேறு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. உலகின் சில பகுதிகளில் சல்பர் டை ஆக்சைட் அதிக அளவில் உள்ளதாக கூறப்படுகிறது.
- இந்தியாவில் முன்பை விட தற்போது சல்பர் டை ஆக்சைட் உற்பத்தி அதிகரித்துள்ளதை செயற்கைக்கோள் படங்கள் காட்டுகின்றன.
- இந்தியாவில் கடந்த 2005 முதல் 2014 வரையிலான செயற்கைக்கோள் படங்களைப் பார்த்தால் சல்பர் டை ஆக்சைட் படிப்படியாக அதிகரித்து வருகிறது.
- இந்தியாவில் சட்டிஸ்கர், ஒடிஷா மாநிலங்களில் சல்பர் டை ஆக்சைட் அதிக அளவில் உள்ளது. இங்கு தொழிற்சாலைகள் அதிகம் என்பது முக்கியமானது.
- சீனாவில் சல்பர் டை ஆக்சைடு அளவைக் குறிக்கும் முயற்சிகள் கடந்த 2007 – ம் ஆண்டிலேயே தொடங்கிவிட்டது. இந்தியாவில் 2011 – ல் தான் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

*Collected from Internet*

### நம்பித்தான் ஆகவேண்டும்

### 5S (தொடர்ச்சி XLIX)

**இரண்டடி உலகம்**

இந்தப் பழக்கத்தை ஒரு தொழிற்சாலைக்கு அல்லது நம் அலுவலகம், வீட்டுக்கும் கொண்டுவர முடியும். எங்கே எதைச் சேமித்திருக்கிறீர்கள் என்பதைத் தெளிவாக எழுதி அல்லது வரைந்து ஒட்டிவிட வேண்டும். அவ்வளவுதான் விஷயம்!.

இப்படி நாம் தயார் செய்கிற அறிவிப்புகள், ஒரே பார்வையில் புரிந்து கொள்ளும்படி இருப்பது அவசியம். ஆகவே, ஒரே குறிப்பின்மீது வெவ்வேறு விஷயங்களைத் திரும்பத் திரும்ப அடித்து எழுதும் பழக்கம் ஆகாது.

இதேபோல், தண்ணீர் படுகிற சில இடங்களில், பேனாவால் எழுதப்பட்ட அறிவிப்புகள் அழிந்துவிடக்கூடும். இதேபோல், காகிதங்கள் நாளடைவில் மக்கி நிறம் மாறிவிடுவது அல்லது உதிர்ந்து கீழே விழுந்துவிடுவதுகூட சாத்தியம்தான். ஆகவே, இதுபோன்ற இடங்களில் பெயின்ட் கொண்டு எழுதப்பட்ட அறிவிப்புப் பலகைகள் தேவைப்படும்.

அறிவிப்புகள் அல்லது உதவிக் குறிப்புகளைத் தயாரிக்கும்போது நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயம், இந்த அறிவிப்புகளை எப்போது மாற்றவேண்டியிருக்கும் என்பது.

உதாரணமாக, நம் வீட்டுக் கதவில் ஒரு பெயர்ப் பலகை இருக்கிறது.

## கவிதைகள்

### A Smile

Smiling is infectious,
You catch it like the flu,
When someone smiled at me today,
I started smiling too.
I passed around the corner,
And someone saw my grin,
When he smiled I realized,
I'd passed it on to him.
I thought about that smile,
Then realized its worth,
A single smile, just like mine,
Could travel round the earth.
So, if you feel a smile begin,
Don't leave it undetected.
Let's start an epidemic quick,
And get the world infected.

*Compiled By : Miss. P. Nirmala Devi*
*Finance*

### TRUE FRIENDS

Birth is the start of life
Beauty is the art of life
Mystery and risk are parts of life
But……
True Friends are the heart of life
When all the seas dry
When all the birds leave the sky
When all the people say goodbye
True Friends will be there to say you Hi.

*Compiled By : Miss. T. Regi*
*Facilitation*

## சிந்தனைக்கு

எதனையும் பரபரப்புடன் செய்வது கூடாது. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இந்த மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை. அனைத்திற்கும் மேலாக அன்பு தேவை. தேவையற்ற பரபரப்பு வேண்டாம்.

*Compiled By : Mrs. R. Jayanthi*
*Marketing*

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

அதில் நம்முடைய பெயர், பதவி, பெற்றிருக்கும் பட்டங்கள் என்று என்னென்னவோ எழுதி, மிஞ்சிய இடத்தில் ஸ்ரீராமஜெயமோ அனுமார் ஸ்லோகமோகூட பொறித்து வைத்திருக்கிறோம்.

இந்த பெயர்ப் பலகை, நன்கு கனமான தகட்டில் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்க்ரு ஆணி கொண்டு நான்கு மூலைகளிலும் நன்கு பொருத்தப்பட்டிருக்கிறது. சுலபத்தில் யாரும் இதை மாற்றிவிட முடியாது.

ஏனெனில், இது நம்முடைய வீடு. இந்தப் பலகையை மாற்ற வேண்டிய அவசியமே இப்போதைக்கு இல்லை.

ஆனால், பக்கத்துத் தெருவில் ஒரு விடுதி இருக்கிறது. அங்கேயும், வந்து தங்குகிறவர்கள் ஒவ்வொருவருடைய பெயர், முகவரி போன்ற தகவல்களை எழுதி, ஒரு பலகையில் மாட்டி வைத்திருக்கிறார்கள்.

அந்தப் பலகையில், எந்தப் பெயரும் தகட்டில் எழுதி, ஸ்க்ரு ஆணி கொண்டு பொருத்தப்படவில்லை. யாரேனும் புதிதாக வந்தால், ஒரு காகிதத்தில் எழுதி உரிய இடத்தில் செருகிறார்கள். அவர் கிளம்பிவிட்டால், அந்தப் பெயரை நீக்கிவிடுகிறார்கள். அவ்வளவுதான்.

ஒரு லாட்ஜில், பலரும் வந்து தங்குவார்கள், கிளம்பிச் செல்வார்கள். அவர்களுடைய பெயர்களையெல்லாம் நிரந்தரமாக எழுதிப் பொருத்திக்கொண்டிருக்க முடியாது. ஆகவே, அடிக்கடி சுலபமாக மாற்றமுடிகிற வகையில் அந்த அறிவிப்புகள் எழுதப்படுகின்றன.

தொடரும்…

### TITANIUM REACTOR

